அனுமதித்துள்ளது. இந்தத் தெரு விளக்குகளை வணிக ரீதியில் அல்லாத உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 64, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**64—**

**துணை மின் நிலையம்**

***39031—திரு. சி. இராசேந்திரன்:**

*மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் உள்ள 33 கி.வா. துணை மின் நிலையத்தை 130 கி.வா. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரம் 33/11 கி.வா. துணை மின் நிலையத்தினைத் தரம் உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை என தமிழ்நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது.*

**திரு. சி. இராசேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் 33 கி.வா. உள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வேண்டிக்கொள்கிறேன் அந்தத் துணை மின் நிலையத்தில் 6000 மின் இணைப்புகள் உள்ளன. அதில் 1,500 மின் இணைப்புகள் விவசாயத்திற்காகப் பயன்படுகின்றன; 14 ஊராட்சிகளை உள்ளடக்கியது இந்தத் துணை மின் நிலையம். அதற்குப் பெரும்பாலும் பட்டுக்கோட்டை*

2004 பிப்ரவரி 13]

மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் மின் தட்டுப்பாடு இல்லாமல் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூளுரைத்து ஆட்சி செய்கின்றபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்ற முகத்தான், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டில் இல்லையென்றாலும் வருகிற ஆண்டிலாவது அதைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். திருவோணம் ஒன்றியத்திலே பின்னையூரில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அது எந்த நிலையில் உள்ளது என்பதையும், தஞ்சை ஒன்றியம் துறையூரில் இருக்கின்ற துணை மின் நிலையத்திற்கு அனுமதி வழங்கியும், இடத்தைப் பெறுவதில் இடர்பாடுகள் இருக்கின்றன. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தைப் பெற்று, அந்தத் துணை மின் நிலையம் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையினை கருத்தினை கவனத்தில் கொண்டுதான் 24-9-2003 அன்று முதல், ஊரணிபுரத்திலுள்ள 33/11 கிலோ வாட் துணை மின் நிலையத்தின் மின்மாற்றியின் திறன் 1X 5 எம்.வி.ஏ.விலிருந்து 1X8 எம்.வி.ஏ.வாக அதிகரிக்கப்பட்டு, புதிய மின்மாற்றியுடன் செயல்பட்டு வருகின்றது. எனவே வருங்காலத்தில் அப்பகுதியில் ஏற்படும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு தரம் உயர்த்துவதற்கான தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதுபற்றி தமிழ்நாடு மின் வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சாவூர் ஒன்றியத்திலே புதிய துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கேட்டிருந்தார்கள். அதேபோல ஒரத்தநாடு ஒன்றியம் கார்காட்டுப்பட்டியிலே புதிய துணை மின் நிலையமும், திருவோணம் ஒன்றியத்தில் பின்னையூரிலே புதிய துணை மின் நிலையமும் தஞ்சாவூர் ஒன்றியம் விழாவூர் உள்ளாட்சிப் பகுதியிலே புதிய துணை மின் நிலையமும் அமைக்கப்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்த ஐந்து கோரிக்கைகளையும் ஆய்வு செய்து

உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஓராண்டில் 60 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு, அதிலே என்னுடைய வரகூர் தொகுதியில் துங்கபுரம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அரசு மூலமாக அதற்குத் தொகையும் வழங்கப்பட்டுவிட்டது. ஏதோ ஒரு காலத்திலே ஆண்டிகள் போய் அந்த இடத்திலே ஏதோ சாப்பிட்டிருப்பார்கள் போல இருக்கிறது. அதனால் ஆண்டிக்குட்டை என்று சொல்லி அதை நீர்ப்பிடிப்புப் பகுதி என்று சொன்னதாலே அதை எடுக்கக் கூடாது என்று அரசு மூலமாக சொன்னதாகக் கேள்விப்பட்டு அங்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்—அது மாதிரி குட்டையும் இல்லை; ஆண்டி போகிற வழியிலே அந்த இடத்திலே உட்கார்ந்து பேசி இருப்பார்கள், அதை வைத்து ஆண்டிக்குட்டை என்று பெயர் வந்துவிட்டது—தற்போது குட்டையும் இல்லை நீர்ப்பிடிப்பும் இல்லை என்று அரசுக்குப் பரிந்துரை கொடுத்திருக்கிறார். அதைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்கு ஆணை கிடைக்க ஆவன செய்வாரா என்று உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பளுவைக் கருத்தில் கொண்டுதான் துணை மின் நிலையம் அமைக்கப்படுகிறது. எனவே நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் மின் பளு அங்கிருக்கின்ற நிலையில் நிச்சயமாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படுவதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் இடம் என்பது மிக, மிகப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நிலவுடமை உரிமை மாற்றம் செய்து கொடுக்கும்பட்சத்தில் மின்சார வாரியத்திற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனவே தற்போது ஒரு முன்னேற்றமாக மாவட்ட ஆட்சித் தலைவரே இதைப்

2004 பிப்ரவரி 13]

பரிந்துரை செய்துள்ளார், நிலவுடமை உரிமை மாற்றம் மின்சார வாரியத்திற்குச் செய்யப்படுமென்று. எனவே அது உண்மையாக இருக்கின்றபட்சத்தில் நிச்சயமாக உடனடியாக அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அதிலே நிலவுடமை உரிமை மாற்றம் குறித்து சில condition-கள் போட்டால் அதற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் extension work-ஆக இருப்பதால் அவரோடு பேசலாம். நம்முடைய மின் வாரியம்கூட மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிறைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கோட்டத்தில் அதிகமாக விவசாயப் பம்புசெட்டுகள் உள்ளதால் அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. எனவே அந்தக் குறையைப் போக்குவதற்கு அந்தப் பகுதியிலுள்ள அனைத்து மின் மாற்றிகளையும் 110 கே.வி.-ஆக தரம் உயர்த்திடவும் கூடுதல் மின்மாற்றிகள் அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே low voltage என்ற பிரச்சினை இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்போதுதான் ஒரு Grid frequency 49.8, அது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்கிற வகையில் ஒரு Grid discipline maintain செய்யப்படுகிறது. Grid discipline என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகவே அவர்களுக்குப் புரிகின்ற வகையிலே சொல்கிறேன். ஒரு மூட்டையை, கிட்டத்தட்ட 49.8 கிலோ எடை கொண்ட அந்த மூட்டையை முதுகிலே தூக்கிக் கொண்டு ஓட வேண்டும். அது சரியாக இருந்தால்தான் அவர் வேகமாக அந்த சீரான நடைக்குச் செல்ல முடியம். அதிலே குறைந்தாலும்கூட அந்த ஓட்டம் குறையும்போது Grid collapse ஆகின்ற ஒரு நிலைமை இருக்கும். அதிகமானாலும்கூட வேகமாக ஓடுகின்ற நிலையிலே Grid collapse ஆகின்ற ஒரு சூழ்நிலை இருக்கும். எனவே தமிழ்நாடு முழுவதும் இந்த Grid discipline maintain செய்யப்படுகின்ற காரணத்தினால் இப்போது

low voltage pocket இல்லை என்கிற ஒரு நிலை இருக்கிறது. இருந்தாலும் ஒருசில இடங்களிலே இது போன்றவற்றை கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரத்திலே அங்கே உண்மையிலேயே மின்பளுவின் காரணமாக சில இடங்களிலே low voltage pocket இருந்தால் அந்த இடத்தைக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 65, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**65—**

**பக்தர்களுக்கு தங்கும் விடுதி**

***33752—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி வசதி செய்துதர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பெறப்படும் வருவாய் நிர்வாகச் செலவினங்களுக்கே போதுமானதாக உள்ளதால் தங்கும் விடுதி கட்ட நிதி வசதி தற்சமயம் இல்லை. நிதி வசதி பெருகிய பின்பு தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு சிந்திக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.